மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூலதன முதலீட்டில் பங்குதாரர்களாகச் சேர்ந்தவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு அந்தப் பங்குதாரர்களுக்கு அந்தப் பணம் திருப்பித்தர வேண்டுமென்ற கோரிக்கைப் பற்றி அரசுக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுப்பார் களானால் கண்டிப்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : பங்குதாரர்களாகப் பணம் கொடுத்த வர்கள் மட்டுமல்ல, அதைவிட அதிகப்படியாக கடன் பத்திரங்கள் மூலமாக ஏராளமான பணம் போடப்பட்டு அந்தப் பணம் கொடுத்தவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பல மாதங்கள் அவர்களை இழுத்தடித்து இன்னும் பணம் கிடைக்காத நிலமையில் கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விவரங்களை அரசுக்குக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடன் பத்திரங்களை வாங்கிய தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டபின் அந்தத் தொகை அவர்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை யென்றால் அதுபற்றிய தகவலின் பேரில் கண்டிப்பான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

கணபதி-உருமண்டம் பாளையம் சாலை.

*வினா எண். 72— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தின் புறநகர் பகுதியில் சத்தி நெடுஞ்சாலை யையும், மேட்டுப் பாளையம் நெடுஞ்சாலையையும் இணைக்கும் கணபதி–உருமண்டம் பாளையம் சாலையை நெடுஞ்சாலை இலாக்காவில் எடுத்து மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: கணபதி–உரு மண்டம் பாளையம் சாலை நெடுஞ்சாலையோடு இணைக்கக் கூடிய பிரதானமான 'பை-பாஸ்' ரோடாக இருக்கிறது. கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் தகராறு ஏற்படக்கூடிய நேரத்தில்

1979 பிப்ரவரி 17]

சகல போக்குவரத்துகளும் இந்த ரோடு வழியாகத் திருப்பி விடப்படுகின்றன. கணபதி-உருமண்டம் பாளையம் சாலை மூன்று பஞ்சாயத்துக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை நேரடியாக ஹைவேஸ் ரோடாக மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற சாலையின் பெரும்பகுதி ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், ஊராட்சியின் கீழும் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக 38,000 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், ஊராட்சிகளின் கீழும் இருந்து வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தால் செப்பனிடப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அரசினுடைய நிதிநிலையும் ஒரு வரம்புக்குட்பட்டு இருக்கும் காரணத்தால் 38,000 கிலோ மீட்டர் சாலைகளையும் ஒரே ஆண்டில் அரசு எடுத்துக்கொள்ள இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையின் முக்கியத்துவத்தை அரசு ஏற்கனவே அறிந்து 92,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டு வரும் ஆண்டில் அது எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

*வினா எண். 73—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைகளிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அலுவல் பார்க்கும் அதிகாரிகள் (on deputation) எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களுக்கு சிறப்பு ஊதியம் மற்றும் விடுமுறை, மருத்துவ வசதி அளிப்பது எந்த விதியின் கீழ் பின்பற்றப் படுகிறது?

(இ) இந்த சலுகைகள் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறதா?

(ஈ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?